ஓய்வூதியச் சுற்றறிக்கை இல: 01/2022

எனது இல : ஓ.தி./சுற்றறிக்கை/2022
ஓய்வூதியத் திணைக்களம்
மாளிகாவத்தை, கொழும்பு 10
2022.01. 20

அமைச்சுக்களின் செயலாளர்கள்,

இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்,

மாகாண பிரதம செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்,

மாவட்ட செயலாளர்கள்,

பிரதேச செயலாளர்கள்,

**ஓய்வூதியர்களுக்கு ரூபா.5,000/- மாதாந்த கொடுப்பனவை வழங்குதல்**

2022.01.13 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2022 இன் பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது. 2022.01.01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஓய்வூதியக் கணிப்பீட்டுக்கு ஏற்புடையதாகாத வகையில் ரூபா.5,000/- மாதாந்த கொடுப்பனவினை ஓய்வூதியர்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. 2022 தை மாதம் முதல் அனைத்து ஓய்வூதியர்களும் இக் கொடுப்பனவுக்கு உரித்துடையவர்களாவர். இக் கொடுப்பனவானது ஓய்வூதியத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் என்பதுடன் 2022 மாசி மாதம் முதல் ஓய்வூதியத்துடன் இக் கொடுப்பனவினை வழங்க ஆரம்பிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவினை வழங்கும் போது பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

I. எவரேனும் ஒரு ஓய்வூதியர் பல ஓய்வூதியம் அல்லது ஓய்வூதியத்துடன் விதவைகள் / தபுதாரர் / அநாதைகள் ஓய்வூதித்தை பெறுவாரானால் அத்தகைய நபருக்கு ஒரு மாதத்திற்கு கொடுப்பனவாக ரூபா.5,000/- மட்டுமே உரித்துடையதாகும்.

II. விதவைகள் / தபுதாரர் / அநாதைகள் ஓய்வூதித்தை பெறுகின்ற தற்போது அரசசேவையில் உள்ள அலுவலருக்கு சம்பளத்துடன் இவ் ரூபா.5,000/- கொடுப்பனவு உரித்தாவதனால் ஓய்வூதியத்துடன் கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது.

III. பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக அங்கவீனமுற்று 55 வயது வரை சம்பளம் பெறுகின்ற அல்லது மரணமடைந்த முப்படை மற்றும் பொலிஸ் அலுவலர் சார்பாக அவர்களின் 55 வயது வரை சம்பளம் பெறுகின்ற தங்கிவாழ்வோருக்கு சம்பளத்துடன் கொடுப்பனவு உரித்தாவதனால் ஓய்வூதியத்துடன் கொடுப்பனவிற்கு உரித்துடைமையாகாது.

IV. வெளிநாட்டு ஓய்வூதியர்கள் இக்கொடுப்பனவுக்கு உரித்துடையர்வகளாக மாட்டார்கள்.

V. மறுமணம் செய்துகொண்டு 50% ஓய்வூதியத்தினை பெறும் விதவைகள் மற்றும் தபுதாரர்கள் இக் கொடுப்பனவின் 50% மாத்திரம் வழங்கப்படும்.

VI. ஒன்றுக்கு மேற்பட்ட பயனாளிகளுக்கு பகிர்ந்து வழங்கப்படும் ஓய்வூதியத்திற்குரிய (அநாதைகள் ஓய்வூதியம்) கொடுப்பனவானது ஓய்வூதியம் பகிந்தளிக்கப்படும் சதவீதத்திற்கு ஏற்ப பகிர்ந்து வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

VII. கொடுப்பனவு வழங்கப்படும் போது ஓய்வூதியர் உயிருடன் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

03. மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு உட்பட்டு, அவற்றை உறுதிப்படுத்திக்கொள்ளும் ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஓய்வூதியத்துடன் இவ் ரூபா.5,000/- கொடுப்பனவு வழங்கப்படும்.

04. மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஓய்வூதியர்களுக்கு சம்பளத்துடன் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்திக்கொண்டு ஓய்வூதியத்துடன் கொடுப்பவினை பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கையினை ஓய்வூதியரின் ஓய்வூதியத்தினை முகாமைத்துவம் செய்யும் பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

05. கொடுப்பவிற்கு உரித்துடைய அனால் ஓய்வூதியத் திணைக்களத்தினால் கொடுப்பனவு ஆரம்பிக்கப்படாத ஓய்வூதியர்களுக்கு கொடுப்பனவினை உரித்துடையதாக்கிக் கொள்ளவதற்கான கோரிக்கையானது AR ஊடாக சமர்ப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

06. ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் ஆனால் மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய இவ் ஓய்வூதியக் கொடுப்பனவிற்கு உரித்துடைமை அற்றவர்களுக்கு கொடுப்பனவு வழங்குதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

07. மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பின் அவற்றை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

**ஒப்பம்/ ஏ. ஜகத் டி. டயஸ்**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்

| | | |
|---|---|---|
| 01 | ஜனாதிபதியின் செயலாளர் | - த.த.த. |
| 02 | பிரதமரின் செயலாளர் | - த.த.த. |
| 03 | செயலாளர், நிதி அமைச்சு | - த.த.த. |
| 04 | செயலாளர், அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | - த.த.த. |
| 05 | கணக்காய்வாளர் நாயகம் | - உ.ந.மே |